**திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை– திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப.,**

**நக. எண். 588 / 2019 பேரூ. 2** **நாள்– 10 .11.2020**

**பொருள்–** **பணிக்குழு – நேரடி நியமனம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – தஞ்சாவூர் மண்டலம் – திருவாரூர் மாவட்டம் – தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் தொகுதி IV- உட்பட்ட பதவிகள்– 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்ட வரித்தண்டலர் – கார்த்திக் (திரு) கே. என்பவருக்கு – வரித்தண்டலர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.**

**பார்வை–**
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடிதம் எண் 939/PSD – C3/ 2019 நாள் 13.02.2019.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், திருவாரூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 558 / 2019 பேரூ.2 நாள். 28.02.2019.
3. அரசாணை எண். 48 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 30.03.1998.
4. அரசாணை எண். 153 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (B) துறை நாள் 22.06.1998.
5. செயல் அலுவலர், நீடாமங்கலம் பேரூராட்சி, கடிதம் ந.க.எண். 57 / 2019 /அ1 நாள் 25.02.2019.
6. சம்பந்தப்பட்டவரின் பணிப்பதிவேடு.
7. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

---

**உத்தரவு**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி– IV இல் அடங்கிய பணிகளுக்கு, **2015-16, 2016-17** மற்றும் **2017-18**ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களிலிருந்து, பார்வை 1இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதத்தின்படி, திருவாரூர் மாவட்ட பேரூராட்சி அலகில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பார்வை **3** மற்றும் **4**இல் காணும் அரசு ஆணைகளில், பேரூராட்சிகளில் பணிபுரிந்துவரும் இளநிலை உதவியாளர் பதவியும், வரித்தண்டலர் நிலை– **1** பதவியும் ஒன்றுக் கொன்று மாற்றத்தக்கது என்பதால், திரு. கே. கார்த்திக் என்பவரை ரூ. **19500 – 62000** நிலை **8** என்ற ஊதிய விகிதத்தில், பார்வை 2ல் காணும் திருவாரூர் மாவட்ட ஆட்சித்

Scanned with CamScanner

தலைவரின் செயல்முறை ஆணையின்படி, நீடாமங்கலம் பேரூராட்சியில் காலியாக உள்ள வரித்தண்டலர் பணியிடத்தில் பணிநியமனம் செய்து உத்திரவிடப்பட்டது.

இந்நேர்வில், திரு. கே. கார்த்திக் என்பவர் 06.03.2019 மு.ப. முதல் நீடாமங்கலம் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணியில் சேர்ந்து தற்போது பணியிட மாறுதலில் முத்துப்பேட்டை பேரூராட்சியில் பணிபுரிந்து வருகிறார்.

எனவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற தொகுதி–IV க்கு 2015-16, 2016-17 மற்றும் 2017-18ஆம் ஆண்டுகளுக்கான போட்டித் தேர்வில் தேர்வு செய்யப்பட்டு, திருவாரூர் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2ல் காணும் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, தற்காலிகமாக வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் மேற்கண்ட பணியாளரை வரித்தண்டலர் நிலையில், கீழ்காணும் விவரப்படி அவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு. கே. கார்த்திக்<br>வரித்தண்டலர்,<br>முத்துப்பேட்டை பேரூராட்சி,<br>திருவாரூர் மாவட்டம். | 06.03.2019 மு.ப | 06.03.2019 மு.ப |

(3/3)

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவாரூர்.

பெறுநர்
திரு. கே. கார்த்திக்,
வரித்தண்டலர்,
முத்துப்பேட்டை பேரூராட்சி,
திருவாரூர் மாவட்டம்.
(செயல் அலுவலர் மூலமாக).

10/11/2020 10/11/22

நகல்– செயல் அலுவலர், முத்துப்பேட்டை பேரூராட்சி, திருவாரூர் மாவட்டம்.
நகல்– சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேடு.
நகல்– பேரூ. 2 இருப்பு கோப்பு .

Executive Officer
Selection Grade Town Panchayat
MUTHUPET
Thiruvarur District

Scanned with CamScanner